மாதர் போதினி

No. 247 ஜூலை 1918 No. 7

RABBI BEN EZRA

ரபி பென் எஸ்றா

'ரபி பென் எஸ்றா' என்ற பாடல் 19-ம் நூற்றாண்டில் வசித்த வித்வ சிரோமணியாகிய ராபட் பிரௌனிங் (Robert Browning) என்ற ஆங்கில கவியால் எழுதப்பட்டது. இவருடைய கவிகள் தத்துவ சாஸ்திரமேரையாய் எழுதப்பட்டு சாமானிய மனுஷர் அறிந்துகொள்ளக்கூடாத ஆழ்ந்த கருத்துள்ளவை. என்றாலும் அவற்றின் கருத்தை விளங்கிக்கொண்டவுடனே அகம் மகிழும்.

'ரபி பென் எஸ்றா' என்ற பாடலிலுள்ள முக்கிய கருத்துக்கள் சத்தியவேதத்தில் அடங்கியவை. அழிந்துபோகும் சரீரத்தையுடைய மனுஷனுக்கு கடவுள் ஏற்படுத்தியிருக்கும் அழியாமையையும், அவன் ஜீவியத்தின் பூரணமுழுமையையும்பற்றிப் போதனையுண்டு. இளமையென்றும் முதுமையென்றுங் கடவுளால் ஏற்பட்டதால் ஒன்றையன்றி மற்றது பூரணமாகாது. நமது காலங்கள் கடவுள் கையிலிருப்பதால் நமது ஜீவியத்தைப்பற்றி ஓர் பூரண ஏற்பாடு வைத்திருக்கிறார். நாம் அவர் கையில் குயவன் களிமண்ணைப்போலிருக்கிறோம். தமது சித்தப்படி நம்மை உபயோகிக்க நாம் அவர் கைக்குள்ளானவர்கள்.

மனுஷனுக்கும் மற்ற சிருஷ்டிகளுக்கும் மிக்க பேதமுண்டு. அழகிய புஷ்பங்களுக்கும், வியக்கத்தக்க நக்ஷத்திர கிரகராசிகளுக்கும் மேலாக ஓர் உன்னத வெளிச்சத்தைக் கடவுள் மனுஷனில் அமைத்திருக்கிறார். இருந்து அழிந்துபோகிற ஜீவப்பிராணிகளைப் போலன்றி மனுஷ அமைப்பில் ஓர் விசேஷமுண்டு. கடவுளாலருளப்பட்ட வெளிச்சம் மனுஷனைத் தூண்டி எழுப்பி தனக்கும் மிருகங்களுக்குமுள்ள பேதத்தைக் காணச்செய்கிறது. மனுஷன் வயிற்

றுப் பிழைப்புக்காக மாத்திரமே உண்டாக்கப்பட்டவனல்ல. பக்ஷி ஜாலங்களுக்கு இரைப்பையை நிரப்பினுல் வேறு கவலையில்லை. மிருகங்களும் வயிருரப்புசித்து திருப்தியடையும். ஆனுல் மனுஷ னுக்கோ உணவும் சிற்றின்பமும் மெய்த்திருப்தி தரா. சகலத்தையும் கைம்மாறின்றி கொடுத்து சவதரித்துவருங் கடவுளைச் சார்வதே மனு ஷனுக்கு ஆனந்தம். நம்மை உணர்த்தும் ஒளியால் கடவுளைக் கிட் டிச் சேருகிறேம். நம்மிடத்திலுள்ளதை அபகரிக்கும் மனுஷ சிநே கிதரைப்போலிராமல் கடவுள் நமக்கு வேண்டியதை ஈகிருர்.

துன்பங்கள் கடவுளனுப்பும் தூண்டுகோல்களாதலால் அவை வர எதிர்பார்த்து சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வோமாக. நமது சந் தோஷங்கள் மும்மடங்கு துக்கமாய் மாறினுலும் நல்லதென்று எண்ணி அவற்ருல் கற்றுக்கொள்வதென்னவென்று ஆராய்வோ மாக.

நல் விருப்பங்கள் கடவுளால் உதிக்கின்றன. நாம் விரும்பும் நற்காரியங்களைச் செய்யக்கூடாவிட்டாலும், அந்த நல்வாஞ்சைக் காக நன்றியாயிருப்போமாக. இந்த நல்விருப்பங்களை நமக்குள்ளே உண்டாக்குகிறவர் கடவுளானதால் அவைகள் நம்மைத் தூண்ட்க் கொண்டேயிருந்தால் நாம் மாம்ச பெலவீனத்தைச் சீக்கிரம் மேற் கொள்ளலாம். நல்வாஞ்சையின்றி சரீர இச்சைகளையே ஒரு வன் நிறைவேற்றிக்கொண்டிருப்பின அவனுக்கும் மிருகங்களுக்கும் பேதமென்ன? கடவுள் கொடுத்த தாலந்துகளை உபயோகிப்பதால் வரவர தீமையை மேற்கொண்டு கடவுளுக்குத் துதிசெலுத்துவோம். சிருஷ்டிகரே நீர் என்னை மனுஷனுய்ப் பிறப்பித்ததற்காக உம்மைப் போற்றுகிறேன். உமது வல்லமையையும் பூரண அன்பையுங் கண்டேன். நீர் என்னில் உமது சித்தத்தை நிறைவேற்றுவீரென்று நம்புகிறேன். ஆவிக்கு விரோதமாய்ப் போராடும் மாமிசம் மேற் கொள்ளப்பட்டு மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று உதவியாகி விட்டதே என்ன ஆனந்தம்! கடவுளுடைய சிந்தை என்னில் உதித்துவிட்டதே யென்று அவரைத் துதிப்போம்.

(இன்னும் வரும்.)

CHILDREN'S PAGE

A Good Friend (A true Story)

ஓர் நல்ல சிநேகிதி (ஓர் உண்மையான கதை)

அமெரிக்காக் கண்டத்தில் இரண்டு சிறுபிள்ளைகள் ஒருவரோடொருவர் சிநேகமாயிருந்தார்கள். இவர்கள் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்திருந்தும் பாடசாலையில் சிநேகிதராயினர். ஒரு பெண் ஐயர் மகள், மற்ற பெண் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆனால் இருவரும் நல்ல பிள்ளைகளாய் வகுப்பிலும் பாடசாலையிலும் எல்லாருக்கும் நன்மாதிரி காட்டி நல்ல பெயரெடுத்தார்கள். ஐயர் மகள் அதிகக் கெட்டிக்காரியானதால் அடிக்கடி வகுப்பில் முதலாய் நின்று வெகுமதிபெற்றாள். மற்ற பெண் அதிகக் கெட்டிக்காரியாய் இல்லாவிட்டாலும் அரும்பிரயாசையினால் வகுப்பில் இரண்டாம் மூன்றாம் இடத்தைக் காத்துக்கொள்வாள். ஐயர் மகள் இயற்கையாய்க் கெட்டிக்காரியானதால் சற்று கவலைத் தாழ்ச்சியாயிருந்து சில வேளை தன் சிநேகிதிக்கும் பிந்திவிடுவாள். இப்படிப்பட்ட சமயங்களில் இவள் சிநேகிதி, தன் துக்கமான பார்வையாலும் கனிவான புத்திமதியாலும் தன் சிநேகிதியின் கவலையீனத்தைக் கடிந்து காட்டி மறுபடியும் அப்படிச் செய்யாதபடி எச்சரிப்பாள். ஐயர் மகள் பாடம் படிக்கவேண்டிய நேரத்தில் வேறே எதாவது செய்துகொண்டிருந்தால் தன் சிநேகிதியின் துக்கமான பார்வையே போதும். உடனே பாடப்புஸ்தகத்தைக் கையில் எடுத்துக்கொள்வாள். யாராவது செய்த கெட்டகாரியத்தைப் பற்றி ஐயர் மகள் தன்னிடம் சொல்லும்போது அவர்கள் செய்த நல்ல காரியங்களை அவள் சிநேகிதி எடுத்துக்காட்டுவாள். ஐயர் மகள் சிநேகம் தனக்கிருந்தால் போதுமென்றிராமல் எல்லாரோடும் சிநேகம் பாராட்ட ஏவுவாள். தானும் சகலரோடும் பட்சமாயிருப்பாள். அவள் பேசும் வார்த்தைகளும், வேலையில் காட்டும் உண்மையும், பரிசுத்த நடக்கை யலங்காரமும் ஐயர் மகளுக்கு அதிக வியப்பாயிருந்தது. நானும் நல்ல பிள்ளையாய் நடக்கப் பிரயாசப்படுகிறேன், எனக்கேன் இவ்வித உன்னத ஜீவியமில்லை யென்று அதிசயித்தாள். அதின் இரகசியம் ஐயர் மகளுக்கு வெகுகாலம் விளங்கவில்லை. ஒருநாள் ஐயர் மகள் தன் சிநேகிதியின் தாயிடம் போய், 'உங்கள் மகளை எப்படி வளர்த்தீர்கள்? அவளிடங் காணப்படும் சிறந்த நற்குணத்தின் இரகசியமென்ன?' என்ன, அந்த அம்மாள், 'உன் தாயைப்பார்த்து நான்

சிறந்தவளல்ல. உன் தாயார் எவ்வளவோ பக்தியுள்ளவர்கள், எத்தனையோ பேரை நல்வழிப்படுத்தி ஆதரிக்கிறார்கள்! என் மகள் தினந்தோறும் அதிகாலையில் ஒருமணி நேரம் கதவைப்பூட்டி தன் அறையில் தனித்திருக்கிறாள். அதுவே அவள் அழகிய ஜீவியத்துக்குக் காரணமென்று நம்புகிறேன்' என்றார்கள். அன்று முதல் ஐயர் மகள் தன் தேவனோடு காலையில் ஒருமணிநேரம் தனித்திருந்து இப்போது பிறருக்கு மிக்க உபயோகமான சிறந்த மிஷனெரியாய் இருக்கிறார்கள்.

ANSWERS TO PUZZLES IN JUNE 1918

ஜூன்மாத விடுகதைக்கு உத்தரவு

1. $12 + 20 + 64 + 4 = 100$
   $12 + 4 = 16$
   $20 - 4 = 16$
   $64 \div 4 = 16$
   $4 \times 4 = 16$

2.



3.



4. 125 மிருகங்களும் 250 பக்ஷிகளும்.
5. வீரன் வயது 18.

GOOD AND BAD MOTHERS

இருவகைத் தாய்மார்

இவ்வுலகிலுள்ள எல்லாவிதப்பொருட்களும் நல்லது கெட்டது என்று இருபிரிவாக இருக்கின்றன. அவ்வாறே தாய்மாரையும் நல்ல தாய்மார் கெட்ட தாய்மார் என்னும் இரண்டு பிரிவாகப் பிரிக்

கலாம். இதை வாசிக்கும் எல்லாத் தாய்மாரும் தாங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களென்று ஆராய்ந்து அறிந்துகொள்வது உத்தமம்.

ஒரு பிள்ளை தன் தாயிடம் வந்து, 'அம்மா, எனக்கு ஒரு ஜெபம் சொல்லித் தாருங்கள். பள்ளிக்கூடத்தில் எங்கள் உபாத்தியாயர் தேவதூதர்களைப்பற்றி ஒரு கதை சொன்னார், நன்றாயிருந்தது. நீங்களும் தேவதூதர்களைப்பற்றியும் மோட்சத்தைப்பற்றியும் ஒரு கதை சொல்லுங்கள்' என்று சொன்னபோது தாய், 'போய் விளையாடு, சோறு கொதித்துவேகிறது, மசாலை அரைத்துக் கறிவைக்கவேண்டும். இப்போ உனக்குக் கதைசொல்லி ஜெபம்பண்ணக் கற்றுக் கொடுக்க நேரமில்லை' என்று சொல்லிவிட்டாள். தாய் வேலையற்றிருக்கும்போது, அந்தப் பிள்ளை திரும்பவும் வந்து, 'அம்மா, இப்போ ஜெபம்பண்ணச் சொல்லித்தாருங்கள்' என்று ஆவலாய்க் கேட்டதற்கு அவள், 'சீ, போ, உன் தொந்தரவை என்னால் பொறுக்க முடியவில்லை. இப்போதான் வேலை ஓய்ந்து சற்றுக் கண்ணைமூடி எழும்பலாமென்று யோசித்தேன். எனக்கு வேறு வேலையில்லையோ?' என்று கடிந்து சொல்லிவிட்டாள். என்ன பரிதாபம்! சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கத் தடைசெய்தவர்களைக் கடிந்துகொண்டு அவர்களை அன்புடன் அணைத்து ஆசீர்வதித்த அருமை இரட்சகரை நோக்கி ஜெபிக்கக் கற்பிக்கவும் அவரைப்பற்றிப் போதிக்கவும் ஒரு தாய்க்கு நேரமில்லாவிட்டால் ஆண்டவர் அவளுக்குக் கொடுத்த நேரமாகிய தாலந்தினால் என்ன பிரயோஜனம்?

மற்றொரு பிள்ளை தன் தாயிடம் வந்து, 'அம்மா, எங்கள் உபாத்தியாயர் "இயேசுவே என்னை இரட்சியும்!" என்று சொல்லி ஜெபம்பண்ணக் கற்றுக்கொடுத்தார்' என்று சொன்னமாத்திரத்தில் தாய், 'வா அம்மா, கண்ணே! நீ அந்த ஜெபத்தைத் திரும்பச்சொல்லு, நான் கற்றுத்தருகிறதையும் படித்துக்கொள். "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்," "கர்த்தாவே எனக்கு இரங்கும்." நீ ஜெபம் பண்ணும்போதெல்லாம் இதைச் சொல்லம்மா. இயேசுவானவருக்குச் சிறுபிள்ளைகளின் துதியும் ஜெபமும் அதிகப் பிரியத்தைக் கொடுக்கிறது' என்று சொல்லிக்கொடுக்கிறாள். இதில் எந்தத் தாயைப்போல் இருக்கிறீர்கள்?

ஒரு தெருவில் சில பிள்ளைகளிருந்து விளையாடிக்கொண்டிருந்து, திடீரென்று சண்டைபோட்டுக்கொண்டு அவரவர் வீடுகளுக்கு ஓடிவருகிறார்கள். ஒரு பிள்ளை தாயிடம் ஓடி, 'அம்மா, அடுத்த வீட்டுத் தங்கம்மாள் என்னை அடித்துவிட்டுப் போகிறாள்' என்று சொல்லவே, தாய், 'அவள் உன்னை அடிக்கையில் உன் கை எங்கேபோயிற்று? அவள் ஒரு அடி கொடுத்தால் உனக்கு மூன்று

நாலு பதிலடி கொடுக்கத் திறமையில்லையே. நீ எப்படி உலகத்திலிருந்து காலங்கழிக்கப்போகிறாய்?' என்று சொல்லுகிறாள். மற்றொரு பிள்ளை தன் தாயிடம் ஓடிவந்து, 'அம்மா, எதிர்த்த வீட்டு மேரி என்னைக் கழுதை, குரங்கு என்று திட்டுகிறாள். இனிமேல் அவள் திரும்பிவரும்போது நீதான் குரங்கு என்று சொல்லிவிடுவேன்' என்று சொல்லுகிறது. அப்போ அந்தத் தாய், 'அப்படித் திருப்பிச் சொல்லக்கூடாது. அந்தப் பிள்ளை உன்னைச் சொன்னால் பரவாயில்லை. நீ அவள் திட்டினதினால் உண்மையாகவே கழுதையும் குரங்குமாகமாட்டாய். அந்த மாதிரித் தூஷணவார்த்தைகள் உன் வாயிலிருந்து புறப்படக்கூடாதம்மா' என்று சொல்லுகிறாள். இவர்களில் எந்தத் தாய் தன் பிள்ளையை நல்வளர்ப்பில் வளர்க்கிறவள் என்று நமக்குத் தெளிவாய்த் தெரிகிறது.

ஒரு தாய் தான் நல்லவளாய் நடக்கிறதுமல்லாமல், பிள்ளைகளைத் தெய்வபயத்தில் வளர்த்தால் மாத்திரம் அவளை நல்ல தாய் என்று சொல்லலாம். எத்தனையோ வாலிபர் தங்கள் பாவங்களில் மூழ்கி கெட்டழியும்போது, 'எங்கள் பெற்றோர் எங்களை நல்ல வளர்ப்பில் வளர்க்காததினால்தான் நாங்கள் இக்கதியை அடைந்தோம்' என்று அங்கலாய்க்க நேரிடுகிறது. ஆனால் தேவ அன்புள்ள பெற்றோரால் வளர்க்கப்பட்ட பிள்ளைகளோ, 'எங்கள் பெற்றோரின் நன்மையினால் தான் நாங்கள் இவ்வளவு கிருபை பெற்றவர்களாயிருக்கிறோம். அவர்களுடைய கனிவான ஜெபங்களே எங்களை இந்தப் பாக்கியமான நிலமைக்குக் கொண்டுவந்தன' என்று சொல்லி மேன்மை பாராட்டுகிறார்கள். ஆகையால் பெற்றோர் பிள்ளைகளைத் தங்கள் ஜெபத்தினாலும், போதனையினாலும், விசேஷமாய்த் தங்கள் முன் மாதிரியினாலும் முன்னுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறார்களென்று தெரிகிறதல்லவா?

இந்தத் தேசத்துத் தாய்மார் தாங்கள் வீட்டிலும், தெருவிலும், தங்கள் பிள்ளைகள் முன்பாகப் பேசுகிற வார்த்தைகளைப்பற்றி அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். வீட்டிலே ஒரு ஸ்திரீ மற்றொரு ஸ்திரீயிடம் அயலகத்தாரைப்பற்றித் தீமையாகப் பேசிக்கொண்டிருந்தால், அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் பிள்ளை தன்னோடு விளையாடும் பிள்ளைகளிடம் மற்றொரு பிள்ளையைப்பற்றிக் கேவலமாய்ப் பேச ஏவப்படுகிறது. அப்படிச் செய்கிறது தப்பிதமென்று தாய் போதித்திருக்கலாம். ஆனால் அவள் காட்டிய மாதிரி கெட்டமாதிரி ஆதலால் அப்பிள்ளையைக் குறைசொல்ல ஏதுவில்லை.

தெருவில் நின்று இரண்டு ஸ்திரீகள் சண்டைபோட்டுக் கிறிஸ்தவர்கள் வாயில் வரக்கூடாத தூஷணவார்த்தைகளைப் பேசித் திட்டும்

போது அதைக் கேட்கும் பிள்ளைகள் அடுத்தநாள் தங்கள் சிறுவிளையாட்டுச் சண்டைகளிலும்கூடத் தாய்மார் சொன்ன அதே கெட்ட வார்த்தைகளைச் சொல்லி ஒருவரையொருவர் திட்டுவதைக் கேட்கலாம். பிள்ளைகள் வாயில்வரும் கெட்டவார்த்தைகளுக்கும், தீமையான பேச்சுகளுக்கும், அஜாக்கிரதையாகப் பேசும் தாய்மார் உத்தரவாதிகள் என்பதற்குச் சந்தேகமில்லை. பிள்ளைகள் பரிசுத்தமான வார்த்தைகளைப் பேசும்படிப் பெற்ரோர் கவலை எடுக்கவேண்டும்.

ஒரு பக்தியுள்ள அம்மாளைக்குறித்து, 'ஒருவரைப்பற்றிப் பேசக்கூடிய நற்காரியங்களிருந்தால் சுருக்கமான இரண்டொரு வார்த்தைகள் அவர்கள் வாயிலிருந்து புறப்படலாம். ஒருவரைக் குறைகூறத் தக்க காரியங்களிருந்தாலோ வாயை மூடிக்கொள்வார்கள்' என்று சொல்லியிருக்கிறது. இது ஒரு நல்ல முன்மாதிரி அல்லவா? 'மனுஷர் பேசும் வீணனவார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்' என்று நமதருமை இரட்சகர் போதித்தார். அதுவுமன்றி அவர் இப்பூமியிலிருக்கையில் யாரைப் பற்றியாவது தீமையாகப் பேசினதாக நாம் வாசிக்கவில்லை. இந்த நல்மாதிரியைப் பின்பற்றிப் பிள்ளைகளுடைய பக்திவிருத்திக்கேதுவான வார்த்தைகளைப் பேசும்படி இத்தேசத்துத் தாய்மாரெல்லாருக்கும் கிருபையுள்ள தேவன் தமது அருளை ஈவாராக!

R. P.

CALEB
காலேப்

காலேப்பினுடைய சரித்திரம் வேதத்தில் மிகச் சுருக்கமாக இருந்தபோதிலும் அதிக அருமையானது. இவன் ஓர் சிறந்த விசுவாசியாயிருந்தபடியினுல் விசுவாசிப்பவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களையெல்லாம் பெற்றுக்கொண்டான். இஸ்ரவேல் ஜனங்களை தேவன் அற்புதமாய் எகிப்திலிருந்து வழி நடத்தினுர். அந்தத் திரளான ஜனங்களில் தேவனையும் அவருடைய அற்புதச் செயல்களையும் பூராவாக நம்பின ஓர் உத்தம தொண்டன். இவன் காலம் முதல் இஸ்ரவேல் ஜனங்களுடைய பிரயாணத்தில் மாறுதல் உண்டாகி தேவனுடைய வழிகளை மனுஷர்கள் ஒருவாறு அறிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது. ஒரு உத்தம விசுவாசியான தேவனுடைய பிள்ளையை எவ்வளவாய் தேவன் நன்குமதித்துக் கொண்டாடுகிறுர் என்று பார்க்கலாம். காலேப்பினுடைய சரித்திரத்தி

லிருந்து மூன்று முக்கியமான விஷயங்களைச் சிந்திப்பது நம்முடைய ஜீவியத்திற்கு அநுகூலமாயிருக்கும்.

முதலாவது, தேவனுடைய வழிகளை அறிந்து நடக்கவேண்டும். ஒவ்வொரு மனுஷனைப்பற்றியும் கருணைநிறைந்த தேவன் நல்ல நோக்கமுடையவராயிருப்பதினால் அவன் ஜீவகாலமுழுவதற்கும் செவ்வையான வழிகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். சங்கடமான வழியாய் இருக்கிறதென்று ஒரு மனுஷன் கண்டால் தன் பாவந்தான் அப்படி ஆக்கியிருக்கிறதென்று அறியவேண்டும். வேதத்தின் உதாரணங்களைப் பார்த்தால் திட்டமாகத்தெரியும். அன்பு நிறைந்த கருணாகரக்கடவுள் ஆதியிலே ஆதாம், ஏவாளைச் சிருஷ்டித்து சிங்காரமான தோட்டத்தில் வைத்து நல்வழிகளை உண்டாக்கி வைத்திருந்தார். அவர்களுக்கு அதிகக்காலம் அந்த வழியில் செல்லப்பிரியமில்லை. பாவத்தினால் தங்கள் சொந்த வழிகளைத் தெரிந்துகொண்டபோது கஷ்டம் உண்டானது. தோட்டத்திற்கு வெளியே தள்ளி அவர்கள் பாவம்போக்க ஜீவபிராணிகளின் பலியினால் ஓர் வழியை உண்டு பண்ணினார். மனுப்புத்திரர் தகுந்தபிரகாரம் அதின் பிரயோசனத்தை அடையாமல் மறுபடியும் மறுபடியும் தங்கள் பாவ வழிகளில் நிலைத்திருந்ததினால் அந்த வழியைத் தகர்த்து தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பரலோகத்திலிருந்து அனுப்பி ஒரேதாமாக பாவத்தைப்போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்ததினால் வேறோர் மேன்மையான ஜீவமார்க்கத்தை மனுக்குலத்துக்கு உண்டுபண்ணினார். யாக்கோபைத் தேவன் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே தெரிந்துகொண்டார். அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருந்தபோதிலும் தன் தாயினால் போதிக்கப்பட்டு தகாதபிரகாரம் தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுகொள்ளத் தலைப்பட்டான். இந்தப் பாவவழி அவன் ஜீவியத்தில் அதிகக் கஷ்டமுண்டாக்கிற்று. மோசே என்றவனை தேவன் அற்புதமாய்த் தெரிந்து கொண்டு பார்வோன் அரமனைப் பயிற்சிக்குப்பின் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு ராஜாவாகவும் இரட்சகனாகவுமிருக்க விரும்பினார். ஆனால் அவன் தகாதமுறையைக் கையாடினதால் எகிப்தைவிட்டு ஓடிப்போகவேண்டியதாகி, பாவவழி, ஆத்திரம் என்ற கேடுகளினால் நாற்பது வருஷம் தேவன் அவனை உபயோகிக்கக்கூடாதபடி சாதாரண வேலை செய்கிறவனானான். தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டு, ராஜபாதையில் நிறுத்தி, நேரே கானான் என்ற பாலும் தேனும் ஓடும் தேசத்தில் சேர்த்துவிட விரும்பினார். ஆனால் அவர்கள் தங்கள் சொந்தப் பாவவழிகளில் நடக்க விரும்பி முரட்டாட்டம் பண்ணி

ஞர்கள். அந்த ஜனங்கள் செய்த மூர்க்கமும் முரட்டாட்டமுமான பாவம் என்னவென்றால், பாரான் வனாந்தரத்தில் சேர்ந்தபோது மோசே என்ற தேவனுடைய மனுஷன் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு கானான்தேசத்தைச் சுற்றிப்பார்த்துவர அனுப்பி, அவர்கள் திரும்பிவந்ததருணத்தில் இவர்கள் செய்த கோஷ்டந்தான். இரண்டு மூன்று தினங்களுக்குள் அந்த தேசத்தைக் கைப்பற்றியிருந்திருக்கலாம், ஆனால் பிரியமில்லை. ஏன்? தங்கள் சொந்தவழி தேவையென்று தெரிந்துகொண்டார்கள். பாவவழிதான் பிரியமாயிருந்தது. பாவவழி எப்போதும் கரடுமுரடானது என்பதை அறியவில்லை. தேவனுடைய உக்கிரகோபம் அவர்கள்மேல் மூண்டது. இந்த இடத்திலிருந்து வேறே மார்க்கமாய் பிரயாணப்படும்படி செய்தார். சுற்றுவழியாய்ப் போய் அநேக நஷ்டங்களும் கஷ்டங்களும் நேர்ந்தன. இந்த வழிப்பிரயாணத்தில் காலேப், யோசுவா என்ற இரண்டு உத்தம விசுவாசிகளைத் தவிர மற்றெல்லா ஆண்பிள்ளைகளும் மடிந்தார்கள். மோசே, ஆரோன், மிரியாம் என்றவர்களும் செத்துப் போனார்கள். நாற்பது வருஷங்களுக்குப் பிற்பாடு செத்துப்போனவர்களுடைய பிள்ளைகள்தான் சுதந்தரமுள்ள பாலும் தேனும் ஓடும் கானானில் பிரவேசித்தார்கள்.

தேவனுடைய வழி உத்தமமானது. அவருடைய வழிகள் நெய்யாய்ப் பொழிகிறது. துன்பங்கள், கஷ்டங்கள், தரித்திரங்கள், வியாதிகள் நம்மைப் பிடித்திருக்கும்போது நாம் நம்மை ஆராய்ச்சி செய்து பாவவழிகளைவிட்டு தேவனுடைய பிரமாணங்களில் நடக்க தேவ ஒத்தாசையைத் தேடவேண்டும். இஸ்ரவேலர் எல்லாரும் முறுமுறுத்து தேவனுக்குக் கோபமூட்டினபோது காலேப் நியாயத்துக்காக எதிர்த்துநின்றான். தேவனுக்காக ஜனங்களோடு போராடினதினால் அவனைக் கல்லெறிந்து கொல்லும்படி எத்தனித்தார்கள். பாவவழியைத் தெரிந்துகொண்ட லட்சக்கணக்கான மனிதர் வனாந்தரத்தில் மடிந்தபோது உத்தமவழியைத் தெரிந்துகொண்ட இந்த இரண்டேபேர் பாதுகாக்கப்பட்டுக் கானானில் பிரவேசித்தார்கள்.

இரண்டாவது, தேவனுடைய சாட்சி. ஏராளமான ஜனங்கள் பாவிகளாகக் காணப்பட்டபோது ஒரே மனிதனுடைய பேர் உத்தமனென்று தேவனால் கூறப்படுகிறது. எண்ணாகமம் 14: 24ல் என் தாசனாகிய காலேப் என்று தேவன் சொல்லுகிறார். தற்காலத்திலும் கிறிஸ்தவரென்று பேர்பெற்ற ஒவ்வொருவரும் தெய்வசாட்சிபெற்றவர்களாய் இருக்கவேண்டும். மோட்சத்தில் நம்மைப்பற்றி என் தாசனாகிய இன்னார் என்று தேவன் பேர் சொல்லிக் கூப்பிடுவாரா? சாட்சி கொடுப்பாரா? அநேக சோதனைகளும் துன்பங்களும் சூற்

றிக்கொண்டிருக்கும்போதுதான் நாம் உண்மையான தேவனுடைய பிள்ளைகளென்று அறியப்படுவோம். அவர் நம்முடைய உட்காருதலையும் எழுந்திருக்குதலையும் அறிந்திருக்கிறார், நமது நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறாரென்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். நல்ல ஜீவியம்செய்யாத தப்பறையான கொள்கைகளையுடைய பேர்க் கிறிஸ்தவர்கள் சபைகளில் தோன்றியிருக்கிறார்கள். தங்கள் படிப்பினாலும் கல்வியினாலும் வெகு சமர்த்தாய் அநேக கொடுமைகளை நடப்பித்து பாவமில்லாதவர்கள்போல் மற்றவர்களுக்குக் காண்பிக்கிறவர்கள் அநேகருண்டு. இந்த காலேபுக்குச் சொன்னபிரகாரம் இருதயத்தைப்பார்க்கிற ஆண்டவர் நம்மை என் தாசன் என்று சொல்லக்கூடவில்லையென்றால் பரம கானானாகிய மோட்சத்தில் சேருவதெப்படி? நமது பேர் மோட்சத்தில் வாசிக்கப்படுமோவென்று திட்டமாய் அறிந்து ஜீவிக்கவேண்டும். தேவனுடைய சாட்சி ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் தேவை.

மூன்றாவது, தேவன்பேரில் உண்மையான விசுவாசம். எண்ணாகமம் 13: 30ல் காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனேபோய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம் என்றும், 14: 9ல் கர்த்தர் நம்மோடே இருக்கிறார் என்றும் சொன்னான். இஸ்ரவேல் ஜனங்களுக்கிருந்த பயமெல்லாம் ஏனாக்கின் புத்திரரைப்பற்றித்தான். எத்தனையோ அதிசயங்களையும் அற்புதங்களையும் பார்த்த ஜனங்கள் இராக்ஷதப்பிறவியான ஏனாக்கின் புத்திரருக்குப் பயந்து நடுங்கி தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாமற்போனார்கள். இந்த காலேபுக்கும் யோசுவாவுக்கும் இருந்த உணர்ச்சி மற்றதிரள் ஜனங்களுக்கில்லை. ஏனாக்கின் புத்திரர் இந்த இரண்டு புருஷருக்கும் துரும்புபோல் காணப்பட்டார்கள், மற்ற ஜனங்களுக்கோ பெரிய மலைபோல் காணப்பட்டார்கள். எப்பேர்ப்பட்ட பலத்த காரியத்தையும் ஜெயிக்க தேவனுக்கு அதிகாரமும் வல்லமையுமுண்டென்று நம்பவேண்டும். இந்த காலேபுக்கு அப்படிப்பட்ட விசுவாசமிருந்தது. ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவனுடைய சத்துவத்தைப்பற்றி அறியும் அறிவு இருக்கவேண்டும். சாத்தானானாலும் பாவமானாலும் உலகமானாலும் மற்றெந்த சத்துவங்களானாலும் நம்மை மேற்கொள்வதேயில்லை. நமக்கு ஜெயங்கொடுக்கிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் மேற்கொள்வோம் என்பதற்குச் சந்தேகமில்லை.

பாவம் நீக்கப்பட்டதைப்பற்றிய உணர்ச்சி, பரிசுத்தத்தைப்பற்றிய உணர்ச்சி, தேவ நடத்துதலைப்பற்றிய உணர்ச்சி ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் இருக்கவேண்டும். அந்த ஆத்துமாதான் உத்தம விசுவாசி,

உண்மையான தேவபக்தன். தேவன் நம்மோவ்வொருவரையும் பார்த்து என் தாசனுகிய காலேப் என்று சொல்லும்படியான கிருபை கிடைக்கும்படி அவரை மன்ருடி உண்மையாய் ஜீவிப்போமாக.

V. D. Kailasam.

A DIALOGUE ON FEMALE EDUCATION

பெண்கல்வியைப்பற்றி ஓர் சம்பாஷணை

அம்புஜம். என்னம்மா ருக்மணி எங்கே விரைவாய்ப் போகின்ருய்?

ருக்மணி. அம்மா அம்புஜம், நான் எவ்விடத்துக்குச் செல்கின்றேனென்று எளிதில் கிரகிக்க உன்னுல் கூடவில்லையா? காத்தினில் புஸ்தகமேந்தி கடுகவே நடைநடந்து மினுக்கியே எண்ணெய் பூசி மேலுடை தானணிந்து பணிவுடன் பரனைப்போற்றிப் பள்ளிக்குச் செல்கின்றேனே.

அம்பு. ஓ! ஓ! படிக்கப்போகிருயா? 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்னத்திற்கு' என்று அடிக்கடி நமது பாட்டிமார் சொல்வதைக் கேட்டதில்லையா?

ருக். அப்படியா?

'எழுத்து வாசக மறியாதவள் மட்டி
எது மறியாதவள் சுரண்டுவாள் சட்டி' என்றும்;

'எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்' என்றும் நமது பெரியோர் கூறியதை நீ வாசித்திருந்தாலல்லோ உனக்குத் தெரியும். எண் ஒரு கண்ணும், எழுத்தொரு கண்ணுமாகிய இவ்விருகண்களுமிருந்தால்தான் நாம் இவ்வுலகில் அதிக ஜாக்கிரதையாயும் ஞானமாயும் நடக்கலாம். இல்லாவிடில் நாம் பேதைகளும் கல்வியறிவில்லா நிர் மூடருமாயிருப்போமே.

அம்பு. 'எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தியே' என நமது வீட்டிலுள்ள ஆண்கள் சொல்வதைக் கேட்டதில்லையோ நீ? அப்படியிருக்க நாம் கல்வியறிவுடையவர்களாயிருந்தும் பயனென்ன? ஆகையால் நமது மூதாக்களிருந்தபடி நாமும் காலங்கழிப்பதை விட்டு நீ புஸ்தகமும் கையுமாய்ப் போவதின் காரணமென்ன?

ருக். அம்மா அம்புஜம், நீ சொல்வது மிக விந்தையே.

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்றொரு ஞானியும்;

'மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோற்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு'

என்று நமது இந்துதேசக் கல்விச் செல்வியாகிய ஔவையார் அருளிச்செய்த மூதுரை யென்னும் பாடலை நீ வாசித்தறிந்தாலல்லவோ உனக்குத் தெரியவரும். ஆகையால் இவ்வித கல்வியறிவும் அதன் பலனாகிய நாகரீகமும் நமக்கத்தியாவசியமே. இல்லையானால் பாட்டைத்தலையாய் நிற்கும் பட்டிக்காட்டாரைப்போல முரட்டுத் துணியை முட்டிக்குமேலுடுத்திக்கொண்டு எத்தனைகாலம் மௌடீக மாயிருப்பது?

அம்பு. நல்லதம்மா ருக்மணி, 'நாகரீகம்' என்றொரு புது வார்த்தையைப் பிரயோகிக்கின்றாயே; அதன் கருத்தென்ன?

ருக். இதென்னம்மா, உனக்கு 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ?' 'உள்ளங்கையினில் நெல்லிக்கனிபோல' உலகத்தார் நாகரீகத்தில் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவருவதை நீ கவனிக்கவில்லையா? உடைநடை பாவனையில் சுத்தமும், வார்த்தைகள் ஸ்பஷ்டமும் உண்மையும், கீழோராயினும் தாழ உரைப்பதுமே சரியான நாகரீகம்.

அம்பு. நல்லதம்மா ருக்மணி, இவ்வித நாகரீகத்தினால் புத்தி தெளிந்து முக்தியடையலாகுமா?

ருக். அருமை அம்புஜமே, நீ அற்ப சொற்ப காரியத்தைக் கேளாமல் அரிய பெரிய காரியத்தைக் கேட்டமையால் நான் அதைக் குறித்து ஆசையோடும் மகா ஆவலோடும் சொல்லுகிறேன் கேள்.

கல்வியினால் கடைத்தேறி நாகரீகத்தால் மாத்திரம் நன்மை பெறாமல், சர்வத்துக்கும் ஆதிகாரணராகிய கடவுள்மேல் வைக்கும் பக்தியினால் மாத்திரம் புத்திதெளிந்து முக்தியடையலாமே யொழிய வேறல்ல.

அம்பு. என்னம்மா நீ பேசுகிறது விபரீதமாயிருக்கின்றதே. கடவுளைக் கண்டதார்? முக்தியின் முகத்தில் விழித்ததார்? என்ன? ஆகாயத்தில் கோட்டை கட்டுகிறாயோ? அப்படிக் கடவுளென்றொருவருண்டானால் அவரை யறிவதெப்படி?

நுக். கடவுள் ரூபமில்லாமல் ஆவியாயிருப்பதால் நாம் அவரைக் காண்பதரிதே. ஆயினும் நாமவரைத்தேடி நமது ஞானக் கண்களால் தரிசிக்கமாட்டாதிருக்கையில் அவர் தாமே நமதுமீது அன்புகூர்ந்து தமது திருலக்ஷணங்களை யெல்லாம் இயேசுகிறிஸ்து என்னும் இன்பநாதர் மூலமாய் வெளிப்படுத்தினர்.

அம்பு. நல்லது; நீ இவைகளை யெல்லாம் எப்படி அறிந்து கொண்டாய்?

நுக். கண்மணியாகிய என் பெண்மணியே! நான் சொல்லு கிறேன் கேள்.

நமது பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் இந்துதேசத்தவராகிய நமது மீது பக்ஷம் பாராட்டி கல்வியென்னு மிவ்வழியாத செல்வத்தை யடையும் வழிவகையை யேற்படுத்தி இவ்வித பாடசாலைகளில் அவைகளை யூட்டிவைப்பதினிமித்தம் பொதுவாக நமது இராஜாங்கத் தாருக்கும், விசேஷமாக நமது இந்தியா தேசத்து சக்கரவர்த்தியும் இங்கிலாந்து தேச இராஜாவுமாகிய ஜார்ஜ் என்னும் அரசனுக்கும் வாழ்த்துதல் சொல்ல நீயும் நானும் இவ்விடத்திலுள்ள யாவரும் மிக வும் அதிகமாய்க் கடமைப்பட்டிருக்கிறோம்.

B. I. Appaduri,
Ponneri.

HUMILITY

தாழ்மை

மானிடரனைவரும் அணியக்கூடிய ஆபரணங்களிலொன்று தாழ்மை. ஆபரணங்களணிவது மனிதருக்கு விருப்பமாயிருப்பினும் இவ்வாபரணத்தை அணிவது வெகுபெயருக்கு வெறுப்பே எனினும், இதுவும் மற்ற ஆபரணங்களைப்போலவே அணிந்துகொள்வோருக்கு லக்ஷணத்தைக் கொடுக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

தாழ்ந்த குலத்தில் பிறந்தோர், தாழ்ந்த அந்தஸ்திலிருப்போர் மாத் திரமே தாழ்மையை யுடைத்தாயிருக்கவேண்டுமென்று எண்ணுவது தப்பு. பள்ளம் ஜலம் நிறைந்திருப்பதுபோலும், விளைந்த கதிர்கள் பணிந்து கிடப்பதுபோலும், பெரியோர் என்றழைக்கப்படுவோர் தாழ்மையுடையவரே. அதாவது தாழ்மையுடையோரையே பெரி யோர் என்று சொல்லலாம். தாழ்மையுடையோரின் நடபடிக்கை களைச் சற்றுக் கவனிப்போமானால் தாழ்மை இன்னதென்பது நன்கு விளங்கும்.

தம்மினும் முதியோர் வந்தால், அவர்கள் எழுந்து நிற்பார். அவர்கள் உட்கார விரும்பின், தாழ்மையுடையோர் ஆசனமளிப்பர். தாம் உட்கார்ந்து முதியோர் நின்று பேசச் சகியார். பிறரோடு சம் பாஷிக்கையில் பணிந்த வார்த்தைகளை உரைப்பர். துன்பப்படுவோரைக் கண்டால் அவர்கள் எவரேயாயினும், தம்மால் இயன்ற உதவி புரிவர். தம் நிலைமைக்கேற்ற வஸ்திரம் தரிப்பரேயல்லாது, அதற்கு மேலான ஆடை அணியார். தம் சுகத்தைப்பாராது பிறர்கஷ்டத்தைச் சிரமேற்கொண்டு அவர்கள் வருத்தத்தை நீக்கப் பிரயாசப்படுவர்.

தாழ்மையுடையோருக்கு வரும் பலாபலன்களெவை? இவ்வுலகில் அவர்களுக்குச் சுகாசுகம் உண்டென்றெண்ண இடமில்லை. ஒருவன் தாழ்ந்துபோவதைக் காணும் அவன் தோழன் இவனைப் பேதை என்று பகடிபண்ணுவான். இவன் பெரியோருக்கு மரியாதை செய்வதைக் கண்டால் 'காக்காய் பிடிக்கிறுன்' என்று சொல்லி நிந்திப்போருமுண்டு. தாழ்ந்த அந்தஸ்துடையோருக்கு உதவிபுரிவதைக் கண்டால் இவனை அவமதிப்பார் பலருண்டு. சாதி கெட்டோன் என்று பலவாறுக வைவதுமுண்டு. இப்படியாக இவன் அநேகமாய்ப் பலரால் இகழப்படுவானேயொழிய, புகழப்படான். பெரியோர் சிலரே இவனைப் புகழுவார். இவனுக்குண்டாகும் பலன் யாதெனில், நான் வெகுபேருக் குதவியாயிருந்தேன் என்று நினைப்பதினுல் அடையும் சந்தோஷமும், மறுமையில் நித்தியபாக்கியம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதினுல் உண்டாகும் ஆநந்தமுமே. கடவுள் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறுர், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறுர்.

'அவர் பலவான்களை ஆசனங்களை விட்டுத் தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினுர்,' 'மேன்மைக்கு முன்னுனது தாழ்மை' என்று சத்தியவேதம் கூறுகிறது.

L. V.

THE EVANGELISTIC CAMPAIGN

சுவிசேஷ படைமுயற்சி விஷயங்கள்

1918 ஷூ த்திய விசேஷித்த சுவிசேஷ படைமுயற்சிக் காலம்

இதுகாறும் விசேஷித்த சுவிசேஷ படைமுயற்சி வேலைக்காக ஒருவாரம் பிரத்தியேகப்படுத்தப்பட்டுவந்தது. ஆனுல் இனி ஒரு மாதம் அவ்வூழியத்திற்கென்று பிரத்தியேகப்படுத்த மிஷன்களையும் சபைகளையும் கேட்கும்படி 1917ஷு டிசம்பர்மீ 15உ கூடிய

கமிற்றி தீர்மானித்தது. முதல் 15 நாட்கள் கிறிஸ்தவர்களை இவ் வேலைக்கென்று ஆயத்தப்படுத்தச் செலவழிக்கப்படும். அடுத்த 15 நாள் புறமதஸ்தருக்குள் ஊழியஞ்செய்ய உபயோகிக்கப்படும். இயற் கனவே 3 மாதங்களாக கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்திவந்து இந்தப் பதினைந்து நாட்களில் விசேஷித்த ஊழியம்செய்து தீர்மானங்களுக் குக் கொண்டுவந்து ஊழியத்தில் உபயோகிக்கவேண்டும்.

இந்த இரண்டு வாரங்களில் பரிந்துபேசும் ஜெபங்கள் செய்ய வும், சபையிலுள்ள ஒவ்வொருவரும் ஹிந்துக்களுக்குச் சொல்லத் தக்கதான விசேஷித்த சுவிசேஷ தூதைக் கற்பிக்கவும் சபைகள் ஒழுங்குசெய்யவேண்டும். சிலர் ஒரு வசனத்தை மாத்திரம் படிக் கக்கூடியவர்களாயிருப்பார்கள், வேறு சிலர் ஒரு பாட்டுக் கற்றுக் கொள்ளலாம், அல்லது கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பொழிப்பாய்க் காட்டும் பாடலைப் படித்துக்கொள்ளலாம். இன்னும் சிலருக்குச் சற்று ஆழமான சத்தியத்தைக் கற்பிக்கலாம். எப்படியானாலும் ஒரு விசேஷித்த வசனத்துடன் அல்லது பொருளுடன் சம்பந்தித்துக் கற்பிக்கவேண்டும்.

இவ்வருடம் நமக்கு முன் வைத்திருக்கும் இலக்கு என்னவென் றால், எப்படியாவது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏதாவது பங்குபெறும் படி செய்வதே. அதிக ஆயத்தமிருந்தால்தான் இதைச் செய்யலாம். ஒவ்வொரு சபையும் முழு உற்சாகத்தோடும் இதில் பங்குபெற வேண்டும். இம்மட்டும் மூன்றில் ஒரு பாகத்தார் மாத்திரம் முயற் சித்திருக்கிறார்கள். ஆகவே நாம் செய்யவேண்டிய காரியம் அதி கமாயிருக்கிறது. ஆகையால் இந்த இரண்டு வார ஆயத்தகாலத்தை சரியானபடி பிரயோகித்தால் நாம் சித்தியடையலாம். இவ்வேலை யிற் பங்குபெறாதவர்களை ஆயத்தப்படுத்தி பங்குபெறும்படி செய்யத் தக்கதாக அவர்களைக்குறித்து ஜெபிக்கவும், அவர்களுடன் பேசவும் சிலரிடம் ஒப்புக்கொடுக்கவேண்டும். இவ்விதம் தனித்தாள் வேலை செய்வதால் இரண்டு வாரக் கடைசியில் சபையின் எல்லா அங்கங் களும் சுவிசேஷவேலையில் பங்குபெற ஆயத்தமாயிருப்பார்கள்.

சிலவிடங்களில் சிலருக்கு விசேஷித்த கிராமங்கள் கொடுக்கப் படும். தனித்தாட்களுக்கு சில வேலைகள் குறிக்கப்படும். எம் முறையைக் கையாடினாலும்சரி ஒவ்வொருவரும் முயற்சியெடுக்கும் படி பார்க்கவேண்டும்.

அடுத்த பதினைந்து நாளும் புறமதஸ்தருக்குள் வேலைசெய்ய உப யோகிக்கப்படவேண்டும். வேலைசெய்யும் முறையைப்பற்றி கை நூலிற் பார்க்கலாம்.

ஒருவாரத்தை பட்டணங்களிலும், மறுவாரத்தை கிராமங்களிலும் வேலைசெய்வதில் உபயோகிக்கலாம். இப்படி செய்வது அந்தந்த இடத்திற்குத் தகுந்தபடியாய் இருக்கவேண்டும். இம்முறையாலும் அதிகப் பிரயோஜனமுண்டு.

சென்றவருடம் தமிழில் அச்சிட்ட பாட்டுகள் இன்னும் உண்டு. ஏப்ரல் மாதத்திற்குமுன் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய இந்நான்கு பாஷைகளிலும் அச்சடிக்கப்பட்ட வசனக்கார்டுகள் அடியிற் கையொப்பமிட்டவரிடம் இருக்கும். வேதபுஸ்தக ஈவுமிஷன் இவைகளைக் கொடுக்கிறது.

1918௵த்து ஏப்ரல் மாதத்தை விசேஷித்த சுவிசேஷ படை முயற்சி மாதமாக உபயோகிக்க கமிற்றி சிபார்சுசெய்கிறது. இந்த மாதமே அநேக சபைகளுக்கு வசதியென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயத்தகாலத்தை உயிர்த்தெழுந்த பண்டிகையோடு ஆரம்பிக்கலாம்.

பெரியகாரியங்களை எதிர்பார்த்து ஜெபத்துடன் அணிகளை ஆரம்பிப்போமாக. இப்படிச் செய்வதாலேயே காரியசித்தியுண்டு. ஒவ்வொரு ஆளும் கிறிஸ்துவுக்கென்று எப்போதும் சாட்சி கூறவேண்டும் என்ற சத்தியம் இன்னும் நமது சபைகளைப் பூராவாக ஆட்கொள்ளவில்லை. இவ்விஷயத்தில் நாம் முன்னேற இதுவே சமயம். நாமெல்லாரும் ஏகமனதாய்ப் பிரயாசப்பட்டால் சித்தியடையலாம். ஏனெனில் உலகத்தை ஜெயித்த கிறிஸ்துவாலேயே நமக்கு வெற்றி கிடைக்கிறது.

H. A. பாப்லி

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-௵ ஜூலை௴

1 தி.	யோவா.	1. 1—14	11 வி.	யோவா.	4 15—30	21 ஞா.	யோவா.	6. 59—71
2 செ.	,,	1. 15—28	12 வெ.	,,	4. 31—42	22 தி.	,,	7. 1—18
3 பு.	,,	1 29—39	13 ச.	,,	4 43—54	23 செ.	,,	7. 19—36
4 வி.	,,	1. 40—51	14 ஞா.	,,	5. 1—18	24 பு.	,,	7 37—53
5 வெ.	,,	2. 1—12	15 தி.	,,	5. 19—29	25 வி.	,,	8. 1—30
6 ச.	,,	2. 13—25	16 செ.	,,	5 30—47	26 வெ.	,,	8 31—47
7 ஞா.	,,	3. 1—13	17 பு.	,,	6. 1—14	27 ச.	,,	8. 48—59
8 தி.	,,	3. 14—24	18 வி.	,,	6. 15—27	28 ஞா.	,,	9. 1—12
9 செ.	,,	3 25—36	19 வெ.	,,	6. 28—40	29 தி.	,,	9. 13—25
10 பு.	,,	4. 1—14	20 ச.	,,	6. 41—58	30 செ.	,,	9 26—41
						31 பு.	,,	10. 1—18

C. L. S. PRESS, MADRAS—1918